கிராமங்களில் மண்பாண்டத் தொழில்

* 97 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மண்பாண்டத் தொழிலை எல்லா கிராமங்களுக்கும் விஸ்தரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இல்லை.

* 98 வினா.—திரு. என் கிட்டப்பா : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கிராமங்களில் மண்பாண்டத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கட்கு கதர்-கிராமத் தொழில் வாரியம் மூலமாக தொழிற் கருவிகள் வழங்க திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, புது வகை சக்கரங்கள், அச்சுகள் வழங்கும் திட்டம் செயல்பட்டு வருகிறது.

Price of mud pots in Salem district

* 99 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether it is a fact that the price of the mud pots has gone up in Salem district during August 1971; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : கதர்-கிராமத் தொழில் வாரியத்தால் செய்யப்படும் மண்பாண்டங்களுடைய விலையில் விலை ஏற்றம் எதுவும் இல்லை.

மெரினாவில் புதிய கலங்கரை விளக்கு

* 100 வினா.—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மெரினா கடற்கரையில் புதிய கலங்கரை விளக்கு கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உண்டா?

(இ) ஆமெனில், எவ்வளவு தொகையில் கட்டப்படும் ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே.

(அ) ஆம்.

(இ) ரூ. 13,23,000.